**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 55/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W–3 |
| Name | : | மாரிக்குமார், வயது 47 |
| Father Name/Husband Name | : | கந்தசாமி |
| Village | : | ராமலிங்கபுரம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | டிரைவர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2023.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ராமலிங்கபுரத்தில் வசித்து டிரைவாக உள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும் சம்பவதன்று சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். இறந்த ராஜேந்திரன் எனது மைத்துனர் உறவு முறை. அ.சா.1 எனது அக்கா முறை.
2. கடந்த 21.08.2022 ஆம் தேதி இரவு 07.15 மணியளவில் எனக்கு குமாரசாமி என்பவர் போன் செய்து எனது மாமாவிற்கு ஜமீன்தேவர்குளம் விலக்கு அருகே வேலை முடித்து அவரு இருச்சக்கர வாகனம் TN 21 K 8481 என்ற Hero Honda வாகனத்தில் சாலையின் இடது வந்து கொண்டிருந்த போது எதிரே வந்த TN 96 C 9151 என்ற பொலிரோ வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டதாகவும் தலையில் காயம்பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டதாகவும் தகவல் சொன்னார்.
3. பின்னர் நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு தலையில் இரத்தக்காயத்துடன் கீழே கிடந்தார். அப்போது அந்த பொலிரோ வாகனத்தின் டிரைவரும் அங்கு தான் இருந்தார். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அவரை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக் கொண்டு சென்றோம்.
4. அங்கு வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. சம்பவம் பற்றி நேரடியாக உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 உங்களுக்கு உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். நீங்களே வாகனம் வைத்து டிரைவராக தொழில் செய்கிறீர்களா அல்லது கூப்பிடும் இடத்திற்கு போவீர்களா என்றால் கூப்பிடும் இடத்திற்கு போவேன். உங்களுக்கு மாதத்தில் எல்லா நாளும் வேலை கிடைக்குமா என்றால் மாதம் 10, 15 நாள் கிடைக்கும்.
2. சம்பவம் நடந்தது பற்றி சொன்னது குமாரசாமி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு தகவல் சொன்னார் என்றால் 07.25 மணிக்கு.

தகவல் சொல்லும் போது எங்கிருந்தீர்கள் என்றால் அதே ஊரில் தான் இருந்தேன். எத்தனை மணிக்கு போனீர்கள் என்றால் 4 நிமிடத்தில் போய்விட்டேன்.

3. சம்பவ இடத்திற்கு போன போது ஆட்கள் அங்கிருந்தார்களா என்றால் இருந்தார்கள். எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் தெரியவில்லை வெளிச்சம் இல்லாததால் சரியாக தெரியவில்லை. பதட்டத்தில் இருந்தேன்.
4. நீங்கள் எப்போது அந்த சாலையில் தான் போய் வருவீர்கள் என்றாலும் அது கிராம புற சாலை என்றாலும் ஒரு வாகனம் சென்றால் சாலையில் ஒதுங்கி நிற்க வேண்டும் என்றால் சரிதான். நீங்கள் சென்ற போது வாகனங்கள் சம்பவ இடத்தில் தான் இருந்தது பயணிகளும் இருந்தார்கள்.
5. நீங்கள் புகார் கொடுக்க முயற்சி செய்தீர்களா அல்லது மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முயற்சி செய்தீர்களா நாங்கள் போவதற்கு முன்னர் 108 க்கு அங்குள்ளவர்கள் தகவல் சொன்னதால் நான் போன உடன் 108 வந்துவிட்டது பின்னர் நான் எனது அக்காவை கூப்பிட்டுக்கொண்டு நாலாட்டின்புதூருக்கு புகார் கொடுக்க சென்றோம்.
6. உங்கள் மச்சானுக்கும் அவரது மகன் திருமணம் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டு இறந்த நபர் தினமும் குடித்துவிட்டு தகராறு செய்து கொண்டிருந்தார் என்றால் அவர் தினமும் குடிக்க மாட்டார் என்றாவது ஒரு நாள் குடிப்பார். அப்படி எந்த பிரச்சனையும் இல்லை.
7. சம்பவம் நடந்த உடன் உங்கள் அக்கா எங்கு வந்தார் என்றால் மருத்துவமனைக்கு வந்தார். சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். உங்கள் அக்கா மற்றும் ஊர்க்காரர்கள் இரவு 09.30 மணிக்கு வந்தார்களா என்றால் இல்லை 08.30 மணிக்கு வந்துவிட்டார்கள்.
8. புகார் மனுவை நீங்கள் எழுதினீர்களா என்றால் இல்லை எனது அக்காமகன் எழுதினார். நீங்கள் தொழில் சம்பந்தமாக வெளியூர் சென்றுவிட்டீர்கள் என்றாலும் நீங்கள் எந்த சம்பவமும் கேள்விபட்டு சம்பவ இடம் வரவில்லை என்றாலும் சரியல்ல.
9. நீங்கள் சம்பவ இடத்திற்கு போகும் போது போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் ஆம் இருந்தார்கள் ஏதோ ஒரு பிரச்சனைக்காக வந்திருந்தார்கள். நீங்கள் பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.